This question paper contains **4** printed pages]

**Roll No.** | | | | | | | | | | | |

S. No. of Question Paper : **7887**

Unique Paper Code : **72082807** GC

Name of the Paper : **MIL Communication (Tamil)**

Name of the Course : **Ability Enhancement Compulsory Course**

Semester : **I**

Duration : **3 Hours** Maximum Marks : **75**

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

1. அலுவரகம் ஒன்றில் உதவிகேட்டு அங்குள்ள அலுவலர் ஒருவரோடு உரையாடும் வகையில் அமைந்த ஓர் உரையாடலை எழுதுக 10

**அல்லது**

'குழந்தைத் தொழிலாளர்' குறித்து ஒரு குழு விவாதிப்பதாக அமைந்த ஒரு விவாதத்தை எழுதுக.

2. நேர்காணல் என்றால் என்ன? அதன் வகைகளை விவிரிக்க. 10

**அல்லது**

அரசியல்வாதி ஒருவரை நேர்காணும்போது தாங்கள் கேட்க விரும்பும் ஐந்து கேள்விகளையும் அதற்கு அவர் தரும் பதிலையும் எழுதுக.

P.T.O.

3. கடிதத்தின் அமைப்பை விவரிக்க. 10

**அல்லது**

பத்திரிகையில் வந்த விளம்பரத்தின் அடிப்படையில் ஒரு கம்பெனியின் மேலாளர் பதவிக்கு ஒரு விண்ணப்பக் கடிதம் வரைக.

4. ஆற்றல் மிகுந்த பேச்சுக்கான மொழி நடையை விள்க்குக. 15

**அல்லது**

'இயற்கையைப் பேணுதல்' குறித்து மேடைப் பேச்சு ஒன்றைத் தயாரிக்க.

5. தமிழ் மொழிபெயர்ப்பின் வகைகளை விவரிக்க. 15

**அல்லது**

கீழவரும் பத்தியைத் தமிழில் மொழிபெயர்க்க:

Sangam was the ancient academy, which enabled Tamil poets and authors to gather periodically to publish their work. The Sangam met periodically in the city of Madurai in South India under the patronage of the Pandya kings. The current estimate is that the Sangam period lasted between 100 BCE until 300 CE. The earliest mention of the Sangam is to be found in the 8th century commentary on the Irayanar Agapporul. It mentions three Sangams lasting, at long intervals, for a total of 9990 years. Sangam literature comprises some of the oldest extant Tamil literature, and deals with love, war, governance, trade and bereavement. Unfortunately much of the Tamil

literature belonging to the Sangam period had been lost. The literature currently available from this period is perhaps just a fraction of the wealth of material produced during this golden age of Tamil civilization.

6. பின்வரும் பத்தியைப் படித்து கேட்கப் பட்டிருக்கும் கேள்விகளுக்குத் தக்க விடைதருக. 15

திருஞானசம்பந்தர் பாடிய இசைப்பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று திருமுறைகளும் திருநாவுக் கரசர் பாடியன. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடல்கள் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வேழு திருமுறைகளையும் தேவாரம் என்று கூறுதல் மரபு. திருஞானசம்பந்தர் தேவாரத்தைத் திருக்கடைக்காப்பு என்றும், திருநாவுக்கரசர் பாடல்களை மட்டும் தேவாரம் என்றும், சுந்தரமூர்த்து சுவாமிகளின் பனுவல்களைத் திருப்பாட்டு என்றும் கூறுவர். ஏழு திருமுறைகள் பண்முறையில் அமைந்தன. தலவரிசையில் ஒரு தேவாரத் தொகுப்பும் உண்டு. அதனை அடங்கன்முறை என்பர். மாணிக்கவாசகிரின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திரு முறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

(1) சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் பாடல்கள் எந்தெந்த திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

(2) மூவரின் திருமுறைகளைக் குறிக்கும் பெயர் என்ன?

(3) மூவரின் திருப்பாடல்களை எந்தெந்தப் பெயர்களில் அழைப்பர்?

(4) எட்டாம் திருமுறை எது?

(5) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பைச் சூட்டி, அப்பத்தி குறிப்பிடும் சாரத்தை எழுதுக.